## IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR

## O.S. No. 248/2001

Deposition of **P.W. -1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench clerk of this court, on 02.02.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : மதிவாணன் Father's Name : ராமசாமி

ஆரம்ப நேரம் : 03.10P.M

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. எனது அப்பா பெயர் கட்டைய படையாட்சி (எ) ராமசாமி படையாட்சி என்றால் சரிதான். அவர் அருகில் உள்ள கிராமங்களுக்கு பஞ்சாயத்திற்கு செல்வார் என்றால் சரிதான். 3-ஆம் வாதி சாந்தாவின் கணவர் எனது உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். அவர் தி.மு.க கட்சியின் ஆத்தூர் ஒன்றிய செயலாளர் என்றால் சரிதான். அவர் செல்லியம்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் தலைவராக இருந்தார் என்றால் சரிதான்.

2. நான் இவ்வழக்கில் கடநத் 2015-ஆம் ஆண்டு சாட்சி சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கை நான்தான் தாக்கல் செய்து நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். நான் ஏற்கனவே சாட்சியம் அளித்துள்ள நிலையில் தற்போது எது குறித்து மீண்டும் சாட்சியம் அளிக்க ஆஜராகியுள்ளேன் என்றால் தாவா சொத்தானது கூட்டுறவு வங்கியிலும், தற்பொழுது RBL வங்கியிலும் அடமானம் வைத்துள்ளது குறித்தும், வில்லங்கசான்று குறித்தும் சாட்சியம் அளிக்க மீண்டும் மனு தாக்கல் செய்யப்பட்டு ஆஜராகியுள்ளேன். இவ்வழக்கில் மீண்டும் சாட்சி அளிக்க மனுவினை நான் தாக்கல் செய்தேனா என்றால் எனக்கு ஞாபாகம் இல்லை.

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.248/2001, Dt. 02.02.2026.

3. நான் ஏற்கனவே தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் கூட்டுறவு வங்கியிலும், RBL வங்கியிலும் தாவா சொத்தை அடமானம் வைத்து கடன் வாங்கிய விவரத்தை கூறியுள்ளேனா என்றால் இல்லை. அவ்வாறு மேற்கண்ட கடனை வாதிகளாகிய நாங்கள் மூவரும் சேர்ந்து வாங்கினோமா என்றால் இல்லை, மூவரும் தனிதனியாக கடன் பெற்றுள்ளோம். கூட்டுறவு வங்கியிலும் தனிதனியாகத்தான் கடன் பெற்று தனிதனியாக திருப்பி செலுத்தியுள்ளோம் என்றால் சரிதான். RBL வங்கியிலும் 3 வாதிகளும் கடன் பெற்றுள்ளோமா என்றால் நானும், 2-ஆம் வாதி அருளும் தனிதனியாக கடன் பெற்றுள்ளோம். 3-ஆம் வாதி சாந்தா எந்த வங்கியில் கடன் பெற்றுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது.

4. RBL வங்கியில் நானும், 2-ஆம் வாதி வாங்கிய கடனும், அதேபோல் 3-ஆம் வாதி பெற்ற கடனும் தற்பொழுது வரை நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். தாவா சொத்தின்பேரில் தொடக்கவேளாண்மை கூட்டுறவு வங்கியில் பெற்ற கடனை திருப்பி செலுத்தியதற்கான ரசீது வழங்கி தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அவ்வாறு கடனை திருப்பி செலுத்தியதற்கான ரசீது வில்லங்க சான்றில் பதிவாகியுள்ளதா என்றால் எனக்கு தெரியாது. ஆனால் அடமான சொத்தை திருப்பியது பதிவாகியுள்ளது. நான் சொல்லும் மேற்கண்ட விவரங்கள் தவறானது என்றால் சரியல்ல.

5. வங்கியில் கடன் பெற்றபொழுது மொத்த சொத்தில் 1/3 பாகத்தை அடமானம் வைத்து கடன் வாங்கினோமா அல்லது அவரவர் பாகத்தை தனித்தனியாக அடமானம் வைத்தோமா என்றால் அவரவர் பாகத்தை தனிதனியாக அடமானம் வைத்து கடன் வாங்கினோம். தற்பொழுது தாக்கல் செய்யப்பட்ட வில்லங்கசான்றில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் அளவுகளும், நான்கெல்லைகளும் தாவா சொத்துவிவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது.

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.248/2001, Dt. 02.02.2026.

6. நாங்கள் மூன்று பேரும் தாவா சொத்துக்களை ஒரே தொகைக்கு கிரயமாக பெற்றோமா அல்லது வெவ்வேறு தொகைக்கு கிரயமாக பெற்றோமா என்றால் தனிதனி கிரயமாக வெவ்வேறான தொகைக்கு கிரயம் பெற்றோம். நான் எவ்வளவு தொகைக்கு கிரயம் பெற்றேன் என்றால் ரூ.62,500/-க்கு கிரயம் பெற்றேன். மேற்படி கிரயத்திற்கு எவ்வளவு தொகை கூட்டுறவு வங்கியில் கடன் பெற்றேன் என்றால் ரூ.1,00,000/- பெற்றேன். கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின்படி பொதுவாக கிரய சொத்தின் சந்தை மதிப்பில் 50%-ம் தான் கடனாக வழங்குவார்கள் என்றால் அதைபற்றி எனக்கு தெரியாது.

7. நான் கிரயம் பெற்ற காலத்தில் கிரயம் பெற்ற சொத்தின் மதிப்பு ரூ. 62,500/- தான் என்றால் சரிதான். நான் கூட்டுறவு வங்கியில் பெற்ற கடனை எத்தனை ஆண்டுகளில் திருப்பி செலுத்தினேன் என்றால் அரசாங்கத்தால் எனது கடன் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. மேற்கண்ட விவரத்தை எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். 3-ஆம் வாதி சாந்தா தான் பெற்ற கடனை பைசல் செய்துவிட்டதற்காக ரசீது ஆவணம் வில்லங்கசான்றில் பதிவாகியுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதேபோல் நானும், 2-ஆம் வதியும் வாங்கிய கடனை பைசல் செய்துவிட்டோம் என்றாலும், ஆனால் அதை தற்பொழுது வரை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல.

8. RBL வங்கியில் எந்த ஆண்டு கடன் வாங்கினோம் என்றால் கடந்த 2017-ஆம் ஆண்டு வாங்கினோம். நான் சொல்வது தவறு என்றாலும், அவ்வாறு 2017-ஆம் ஆண்டு RBL வங்கியில் கடன் வாங்கியதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. மேற்படி வங்கியில் பெற்ற கடனை திருப்பி செலுத்திவிட்டபோதிலும், அதற்கான ரசீதையும், தாவா சொத்தின் அசல் ஆவணங்களையும் நீதிமன்றத்தில் ஒப்படைத்தால் இவ்வழக்கிற்கு விரோதமாக அமையும் என்பதால் அந்த உண்மையை நான் மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல.

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.248/2001, Dt. 02.02.2026.

9. வாதிகளாகிய நாங்கள் கிரயம் பெற்ற சொத்து கூட்டுக்குடும்ப சொத்தோ, பரம்பரை சொத்தோ இல்லையென்றால் சரிதான். நாங்கள் தனிதனியாக கிரயம் பெற்றோம். தாவா சொத்துக்களை நாங்கள் கிரயம் பெற்ற பொழுது எங்களுக்கு விற்பனை செய்த நபர் பெயரில் உரிமை மூல ஆவணமும், வருவாய் துறை ஆவணங்களோ இல்லை என்றால் எங்களுக்கு விற்பனை செய்தவர்க்கு டி கார்டு மூலம் பாத்தியப்பட்ட சொத்து, அதற்கான கந்தாய ரசீதுகள் அவரது தகப்பனார் பெயரில் இருந்தது. நான் கூறும் டி கார்டு பட்டா எண் தாவா சொத்து விவரத்திலோ, வில்லங்க சான்றில் கூறப்பட்டுள்ள சொத்து விவரத்திலோ, எனது முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்பிடப்படவில்லை என்றால் எனது முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன். நான் சொல்வது தவறு என்றாலும், அவ்வாறு முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றாலும் சரியல்ல. எனக்கு தாவா சொத்தை விற்பனை செய்த நபருக்கு விற்பதற்கான உரிமை இல்லை என்றால் சரியல்ல.

10. நான் தாக்கல் செய்துள்ள கிரய ஆவணம் என்னால் வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட போலியான ஆவணம் என்றால் சரியல்ல. அந்த கிரய ஆவணம் போலியான ஆவணம் என்பதால்தான் அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கடந்த 1966-ஆம் ஆண்டிலிருந்து தாவா சொத்தில் 1-ஆம் பிரதிவாதிதான் அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றாலும், தாவா சொத்துக்கள் 1-ஆம் பிரதிவாதிக்கு நீண்ட எதிரிடை அனுபவத்தின் மூலம் பாத்தியப்பட்டது என்றாலும், தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

11. வா.சா.ஆ.10 ஆன பட்டாவானது கடந்த 14.03.2023 அன்று இவ்வழக்கிற்காக சுமார் 22 ஆண்டுகள் கழித்து தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10ல் கண்டுள்ள சர்வே எண்ணில் எந்தெந்த வாதிகளுக்கு எவ்வளவு நிலம் பாத்தியப்பட்டது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அது கூட்டுப்பட்டா

ஆகும். வா.சா.ஆ.10 ஆனது போலியான ஆவணம் என்றாலும், வழக்கிற்கும் இந்த ஆவணத்திற்கும் தொடர்பில்லை என்றாலும் சரியல்ல.

12. 1-ஆம் பிரதிவாதியானவர் சேலம் மல்லூர் கிராமத்தில் பொய்மான் கரடு என்ற இடத்திலிருந்து தாவா சொத்திற்கு குடிபெயர்ந்தவர் என்றால் சரியல்ல. நாங்கள் அரசியல் செல்வாக்கையும், குடும்ப செல்வாக்கையும் பயன்படுத்தி போலி ஆவணங்கள் தயார் செய்து தாவா சொத்தில் உரிமை கொண்டாடி வருகிறோம் என்றால் சரியல்ல, எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றால் சரியல்ல.

முடிவு நேரம்: 03.52 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

Sd/-D.JansiRani
Additional District Munsif, Attur

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.248/2001, Dt. 02.02.2026.